**நெசவு மற்றும் சிறு கைத்தொழில் பயிற்சி நிலையங்களுக்கான பயிற்சிப் பயிற்றுவிப்பாளர்கள் (TOT) மற்றும் நெசவுத் தொழிலாளர்களை இணைத்துக் கொள்ளல்**

**கிராமிய தொழிற்துறைத் திணைக்களம், கிழக்கு மாகாணம்**

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ் செயற்படும் நெசவு மற்றும் சிறு கைத்தொழில் பயிற்சி நிலையங்களில் காணப்படும் போதனாசிரியர் வெற்றிடங்கள் நிரந்தர அடிப்படையில் நியமிப்பு மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக அடிப்படையில் பணியாற்ற பயிற்சிப்பயிற்றுவிப்பாளகளை (Trainers Of Trainees – TOT) இணைத்துக் கொள்ளவும், நெசவு நிலையங்களில் துண்டுக் கூலி அடிப்படையில் பணியாற்ற நெசவுத் தொழிலாளர்களை இணைத்துக் கொள்ளவும் கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. அவ்வகையில் பின்வரும் தகைமையைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழேயுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்க முடியும்.

பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அனைவரும் பயிற்சிப்பயிற்றுவிப்பாளராக பணியாற்ற தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

**01. தேவைப்படும் கல்வித் தகைமைகள் - பயிற்சிப்பயிற்றுவிப்பாளர் (TOT)**

- ❖ கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் அத்துடன் வேறு இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

- ❖ கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல்

அத்தோடு;

**தொழில்சார் தகைமைகள் - பயிற்சிப்பயிற்றுவிப்பாளர் (TOT)**

- ❖ அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நெசவு நிறுவனமொன்றிலிருந்து கைத்தறி நெசவுத் துறையில் 02 வருட டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

- ❖ அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நெசவு நிறுவனமொன்றிலிருந்து கைத்தறி நெசவுத் துறையில் 01 வருட சான்றிதழ் பாடநெறியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

- ❖ கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ் செயற்படும் பயிற்சி நிலையங்களில் 1 வருடத்திற்கு குறையாத காலப்பகுதிக்கு பயிற்சி பயிற்றுவிப்பாளராக திறமையாக கடமையாற்றியிருத்தல்.

**02. தேவைப்படும் தகைமைகள் - நெசவாளர்கள் / நெசவுத் தொழிலாளர்கள்**

கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நெசவு நிலையங்களில் பணியாற்றியுள்ள/பயிற்சி பெற்றுள்ள மற்றும், நெசவுத் தொழில் பற்றிய முன்னனுபவமுள்ள அனைவரும் துண்டுக் கூலி அடிப்படையில் திணைக்களத்தின் கீழ் செயற்படும் பயிற்சி நிலையங்களில் இணைந்து பணியாற்ற விண்ணப்பிக்க முடியும்.

## 03. வெற்றிடங்களும் விண்ணப்பிக்கும் முறையும்

- ❖ போதனாசிரியர்கள் வெற்றிடமாகவுள்ள மற்றும் பயிற்சிப்பயிற்றுவிப்பாளராக இணைந்து பணியாற்றக்கூடிய நிலையங்களின் விபரங்கள் கிழக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் www.ep.gov.lk/industrialindex.asp எனும் இணையத்தளத்திலே பார்வையிட்டு விரும்புகின்ற நிலையத்தினை விண்ணப்பதாரி தெரிவு செய்ய முடியும்.
- ❖ நெசவுத் தொழிலாளர்களாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமக்கு விருப்பமான ஏதேனும் நெசவு நிலையம் தொடர்பிலே தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். திணைக்களத்தின் கீழ் காணப்படும் அனைத்து நெசவு நிலையங்களின் விபரங்களையும் மேற்படி இணைய தளத்திலே பெற்றுக் கொள்ள முடியும்.
- ❖ மேலேயுள்ள இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அல்லது தலைமைக் காரியாலயம் / உரிய மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்கள அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களின் பிரதியுடன் 31.10.2017 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

## தெரிவும் கொடுப்பனவும்

- ❖ உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் நேர்முகத் தேர்வு மற்றும் பிரயோகப் பரீட்சை(Practical exam) ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். முழுமையான தகுதிகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதியளவில் காணப்படாத போது பகுதியளவு தகுதியை கொண்டுள்ளவர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் கவனத்திற் கொள்ளப்படுவர்.
- ❖ திணைக்களத்தின் கீழ் தற்போது பணியாற்றும் மற்றும் முன்னர் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ❖ தெரிவு செய்யப்படும் தகுதியான பயிற்சிப்பயிற்றுவிப்பாளருக்கு, பணியாற்றும் நாளொன்றுக்கு ரூபா 1000.00 வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- ❖ நெசவாளர்களுக்குரிய கொடுப்பனவானது மேற்படி இணையத்தளத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள துண்டுக்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
- ❖ பயிற்சிப்பயிற்றுவிப்பாளராக இணைத்துக் கொள்பவர்களின் சேவையானது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தேவையின் அடிப்படையில் கால நீடிப்பு செய்து வழங்கப்பட வாய்ப்புள்ளதுடன், அவ்வாய்ப்பானது உரிய பயிற்சிப்பயிற்றுவிப்பாளரின் நன்நடத்தை, வினைத்திறனான செயற்பாடு மற்றும் உற்பத்தியின் அளவு என்பவற்றின் அடிப்படையில் திணைக்களத்தலைவரின் தற்துணிவின் பேரில் மாவட்ட அலுவலகர்களின் சிபார்சின் அடிப்படையில் அமையும்.
- ❖ மேலும் இந் நியமனமானது எவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரந்தர நியமனம் அல்லது வேறு வகை நியமனமொன்றிற்கு வழிசமைப்பதாக அமையாது.


மாகாணப் பணிப்பாளர்
கிராமிய தொழிற்துறைத் திணைக்களம்
செல்வநாயகபுரம்
உப்புவெளி
திருகோணமலை